

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவில் தக்கார் கருமுத்து தி.கண்ணன் அவர்கள் மறைவினையொட்டி அன்னாரின் உடலுக்கு கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்திய போது எடுத்தபடம். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.ஐ.மகிழன், மாநகர் மாவட்ட நிர்வாகி சின்னம்மாள் மற்றும் பலர் உள்ளனர்.



திண்டிவனத்தில்நடைபெற்றவிழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு கூட்டத்தில்விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளரும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சருமான செஞ்சி மஸ்தான் சிறப்புரை ஆற்றினார். உடன் மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் சேகர் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

### மறைந்த கருமுத்து கண்ணன்

# மக்கள் மனதில் நீங்கா இடம்பெற்ற மனிதநேயப் பண்பாளர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!

**சென்னை, மே 25-**

**மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோயில் தக்கார் கருமுத்து கண்ணன் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளார். அதில் 'மக்கள் மனதில் நீங்கா இடம்பெற்ற மனித நேயப் பண்பாளர் கருமுத்து கண்ணன் அவர்கள்' என்று புகழாரம் சூட்டியுள்ளார்.**

மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோயில் தக்கார் கருமுத்து கண்ணன் அவர்கள் மறைவையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோயிலின் தக்கார் கருமுத்து கண்ணன் அவர்கள் மறைந்த செய்தியால் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன். அவரது மறைவிற்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.



தனது தந்தை காலத்தில் இருந்தே கழகத்தின் மீதும் எங்கள் குடும்பத்தின் மீதும் மிகுந்த அன்பு கொண்டிருந்த அவர், நான் எப்போது மதுரை சென்றாலும் பாசத்தோடும் இன்முகத்தோடும் வரவேற்பார். தியாகராசர் பொறியியல் கல்லூரி இயக்குநராகப் பொறுப்பு வகித்துப் பல ஏழை மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு உதவி செய்த மனிதநேயப் பண்பாளர்.

2006இல் கழக ஆட்சி அமைந்ததும் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலின் அறங்காவலர்க் குழுத் தலைவராக கருமுத்து கண்ணன் அவர்கள் நியமிக்கப்பட்டார். மதுரை மீனாட்சியம்மன் கோயிலின் தக்காராகப் பல ஆண்டுகள் பணியாற்றி, கோயில் புனரமைப்புப் பணிகளை மிகச் சிறப்பாக மேற்கொண்டு மதுரை மக்களின் மனதில் நீங்கா இடம் பிடித்தவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் மாநில திட்டக்குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டு மாநிலத்தின் வளர்ச்சிக்குத் தேவையான திட்டங்கள் உருவாக்குவதில் துணை நின்றவர். நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் எனது தலைமையில் அமைக்கப்பட்ட இந்து சமய அறநிலையத் துறை உயர்நிலை ஆலோசனைக் குழுவிலும் உறுப்பினராக இருந்து இந்து சமய அறநிலையத்துறைக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கியவர்.

தொழில்துறை, கல்வித்துறை, கோயில் திருப்பணிகள் என அனைத்திலும் சிறந்து விளங்கி, பலருக்கும் உதவிகள் செய்த உயர்ந்த உள்ளம் கொண்ட கருமுத்து கண்ணன் அவர்களின் மறைவு பேரிழப்பு. அவரது மறைவினால் வாடும் அவர்தம் குடும்பத்தாருக்கும், அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள்!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

விழுப்புரம், மே 25-

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு பிறந்த நாள் விழா ஆண்டு முழுவதும் பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்திஏழை எளிய மக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு ஆலோசனைக் கூட்டம்திண்டிவனத்தில் நடைபெற்றது.

மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர் தலைமை தாங்கினார்.

மாவட்டத் துணைச் செயலாளர்கள்ரவிக்குமார், அருணகிரி, அமுதா ரவிக்குமார் முன்னிலை வகித்தனர்.திண்டிவனம் நகர செயலாளர் கண்ணன் அனைவரையும் வரவேற்றார்

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளரும்,சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அப்போது பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்:

இந்தியாவில் பல்வேறு குடியரசுத் தலைவர்களையும் பிரதம மந்திரிகளையும் உருவாக்கி சுதந்திர தினத்தில் சட்டமன்றதலைமைச் செயலகத்தில் முதலமைச்சர்களுக்கு தேசியக் கொடியினை ஏற்றும் உரிமையை பெற்று தந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை சீரும் சிறப்புமாககொண்டாட வேண்டுமெனகழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்திவுள்ளார்கள்.

அந்த வகையில் விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அனைத்து ஊராட்சிகளிலும், நகர, பேரூர், வார்டுகளிலும் கழக இரு வண்ணக் கொடியினை ஏற்றி வைத்து இனிப்புகள் வழங்கி ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளையும், பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரண பொருட்களையும் வழங்கிட வேண்டும் எனவும்.

கழக மூத்த முன்னோடிகளை அவர்கள் இல்லத்திற்கு சென்று சந்தித்து அவர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குவது, கலைஞரின் நூற்றாண்டு பிறந்தநாள் விழா கொண்டாடும் வகையில்ஆண்டு முழுவதும் பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்திஏழை எளிய மக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குவது எனவும்

கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தி.மு.க.வில் புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் முகாமை விரிவுபடுத்தி புதிய உறுப்பினர்களை தி.மு.க.வில் சேர்ப்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

தொடர்ந்து மயிலம் ஒன்றியம் செண்டூர்கானா சீதாராமன்இயற்றியமுத்தமிழ் அறிஞர் கலைஞரின் பிறந்த நாள் பாடல் ஆடியோவை அமைச்சர் செஞ்சி மஸ்தான் வெளியிட்டார்.

கூட்டத்தில் மாநில நெசவாளரணி செயலாளர் செஞ்சி தொகுதி பொறுப்பாளர் அன்பழகன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள்டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், சீத்தா லட்சுமி சொக்கலிங்கம், செந்தமிழ் செல்வன், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் விஜயகுமார், நெடுஞ்செழியன், சீனி ராஜ்,பொதுக்குழு உறுப்பினர்கள் கதிரேசன், செல்வராஜ், மணிவண்ணன், வீடூர் ரவி, ஒன்றிய கழக செயலாளர்கள் சொக்கலிங்கம், அண்ணாதுரை, ராஜாராம், மணிமாறன், துரை, விஜயராகவன், தயாளன், பழனி, ரவிச்சந்திரன்,இளம்வழுதி, பச்சையப்பன், செழியன், அனந்தபுரம் நகர செயலாளர் சம்பத்,அணிஅமைப்பாளர்கள் ஆனந்த்,எம்.டி.பாபு, ஆதித்யன், திருமலை, திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான்,உள்ளிட்டமாவட்ட ஒன்றிய நகர பேரூர்கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர். மாவட்டத் துணைச் செயலாளர் ரவிக்குமார் நன்றி கூறினார்.

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமை! அமைச்சர்கள் கே.ஆர். பெரியகருப்பன் - வி.செந்தில்பாலாஜி - அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலை! இன்று

# மாமன்ற உறுப்பினர் வேளச்சேரி வே.ஆனந்தம் இல்ல மணவிழா!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நடத்திவைத்து - வாழ்த்தி உரையாற்றுகிறார்!

**சென்னை, மே 25-**

**சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி துணை அமைப்பாளரும், பெருநகர சென்னை மாநகராட்சி 176வது வார்டு மாமன்ற உறுப்பினருமான வேளச்சேரி வே.ஆனந்தம் புதல்வி வே.ஆ.அபிநயா-லோ.ஹிரிஹரன் ஆகியோரின் திருமணத்தை, இன்று (மே 25), தேவகோட்டையில், கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகிறார்.**



இம்மணவிழா பற்றிய விபரம் வருமாறு: -

சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி துணை அமைப்பாளரும், 176 வது வார்டு மாமன்ற உறுப்பினருமான வேளச்சேரி வே. ஆனந்தம் - திருமதி ரேவதி ஆனந்தம் ஆகியோரின் புதல்வி வே. ஆ. அபிநயா-பட்டுக்கோட்டை மு.லோகநா தன் - திருமதி ராஜலட்சுமி லோகநாதன் ஆகியோரின் புதல்வர் லோ.ஹிரிஹரன் ஆகியோரின் திருமணம், இன்று (25.5.2023 -வியாழக்கிழமை காலை 10.30 மணி அளவில் தேவகோட்டை, ராம்நகரில் அமைந்துள்ள ஸ்ரீ தாய் மஹாலில் நடைபெறுகிறது.

மணவிழாவிற்கு - சென்னை தெற்கு மாவட்டச் செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் தலைமை வகிக்கிறார்.

சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளரும், கூட்டுற வுத் துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன், மின்துறை அமைச்சரும், கரூர் மாவட்டக் கழகச் செயலாளருமான வி.செந்தில் பாலாஜி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சரும், திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் எஸ். ஜோயல், ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ., நாகனி செந்தில்குமார், சு.சேகர், துரை கபிலன், பெரி. பாலமுருகன், கருணாகிட்டு ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

திருமணத்தை - கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகிறார்.

மேலும் மணவிழாவில் - கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், இராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம், முனைவர் தமிழச்சி தங்கப்பாண்டியன் எம்.பி. சென்னைப் பெரு நகர மாநகராட்சி மேயர் பிரியாராஜன், துணை மேயர் மு.மகேஷ் குமார், முன்னாள் எம்.எல்.ஏ., கே.ஆர்.இராமசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த் ரமேஷ், காரம்பாக்கம் க. கணபதி, ப.தாயகம் கவி, ஜெ.எம்.எச்.ஹாசன் மௌலானா, எஸ்.மாங்குடி மற்றும் க. தனசேகரன் எம்.சி. வி.அசோக், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் நேர்முக உதவியாளர் எம்.செந்தில், டாக்டர் மா.சு.இளஞ்செழியன், வேளச்சேரி பி. மணிமாறன் எம்.சி., ஜி. பி.ராஜா, கவிஞர் காசி முத்து மாணிக்கம், பாலவாக்கம், க.சோமு, ஆலப்பாக்கம் கு. சண்முகம், என். நல்ல சேதுபதி, எஸ். குணசேகரன், பாலவாக்கம் த. விஸ்வநாதன் எம்.சி. பாலவாக்கம் மு. மனோகரன் எம்.சி., வேளச்சேரி எஸ். பாஸ்கரன் எம்.சி., வாசுகி பாண்டியன், இரா.துரைராஜ் எம்.சி., எம். கிருஷ்ணமூர்த்தி எம்.சி., பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந்திரன் எம்.சி., வி.இ. மதியழகன் எம்.சி., நொளம்பூர் வே.ராஜன் எம்.சி., கே. கண்ணன் எம்.சி., மு.இராசா எம்.சி., துரை வீரமணி, ஜி.வெங்கடேசன், கரூர் எஸ்.பி.கனகராஜ் எம்.சி., இரா. தயாளன், நாகனி ஆர்.ரவி, வி.பூபால சிங்கம், லே.மு. ரவிச்சந்திரன் அடையாறு பி.ஜே.பாஸ்கர், ஆர். பாலசுந்தரம், அ.ஹரி கிருஷ்ணன், சைதை சம்பத், சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், மேடவாக்கம் ப.ரவி, எம். கே.ஏழுமலை, உ.துரைராஜ், எஸ்.டி.தங்கராஜன், பி.எஸ். முருகேசன், மின்னல் கந்தப்பன், வீர.கனிமொழி, வ. செல்வகுமார், த.பஷீர் உள்பட பலரும் உள்பட பலரும் மணவிழாவில் கலந்து கொண்டு வாழ்த்துகிறார்கள்.

எம்.விநாயக மூர்த்தி, என்.டில்லிகுமார், ஆர்.கே. சந்திரேஷ், எம்.எஸ்.விஸ்வா, வி.சண்முகநாதன், என். நல்லசேதுபதி, செ.பழனியப்பன், சி.சஞ்சீவி, பி.கே. சோம்ராஜ் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### ஆவடியில் தெருமுனைக் கூட்டம்!

திருவள்ளூர், மே 25–

திருவள்ளூர் மத்திய மாவட்ட ஆவடி வடக்கு பகுதி தி.மு.க இளைஞர் அணி சார்பில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க தெருமுனை கூட்டம் ஆவடி அடுத்த அண்ணா நகரில் பகுதிச் செயலாளர் ஆவடி ஜி.நாராயண பிரசாத் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் ஆவடி சா.மு.நாசர் தமிழ்நாடு கொறடா கோவி.செழியன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். உடன் ஆவடி மாநகராட்சி மேயர் ஜி.உதயகுமார், மாநகர பொறுப்பாளர் சன் பிரகாஷ், தலைமை செயற்குழு உறுப்பினர் நடுகுத்தகை கே.ஜெ. ரமேஷ், மாநில மாவட்ட நிர்வாகிகள் பிரபு கஜேந்திரன், சி.ஜெரால்டு, மண்டல குழு தலைவர் ஜோதிலட்சுமி, பகுதிச் செயலாளர்கள் ஜி. ராஜேந்திரன், பேபிசேகர், பொன். விஜயன், பகுதி நிர்வாகிகள் டி.துரைராஜ், ஜோ.ஜான்சன்ரோசாரியோ, நளினிகோபி, எ.ஹாஜாசெரிப், சி. ராமமூர்த்தி, என்.விஜயகுமார், வி.நரேந்திரன், நா.விஜயகுமார், ஜா.நவ்சாத். வார்டு கவுன்சிலர் ஆ.வீரபாண்டியன், வட்டச் செயலாளர் வழக்கறிஞர் வி.டி.ரவிக்குமார், இளைஞர் அணி ஜெ.தினேஷ்குமார் உள்பட பலர் உள்ளனர்.

### தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுனர் அணி

# மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம்!

தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுனர் அணி மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் நாளை (26.05.2023 வெள்ளிக்கிழமை) காலை 10 மணிக்கு மாநில தலைவர் டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி. தலைமையில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்:**தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா.

**டி.செங்குட்டுவன்,**
செயலாளர்,
தி.மு.க. அமைப்பு சாரா ஓட்டுனர் அணி

### தி.மு.க. மருத்துவ அணி

# மாநில நிர்வாகிகள் கூட்டம்!

## மருத்துவ அணிச் செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. அறிவிப்பு

கழக மருத்துவ அணியின் மாநில நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் 30.05.2023 செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக மருத்துவ அணியின் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா
2. அணியின் வளர்ச்சிப் பணிகள்

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 24.05.2023

**மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ.**
செயலாளர்
தி.மு.க. மருத்துவ அணி



தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் ஒன்றியத்தில் நடைபெற்ற வருவாய் தீர்ப்பாய குடிகள் மாநாட்டில் பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டுமனை பட்டா, தையல் இயந்திரங்கள், வேளாண் உதவிபொருட்களை தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, மாவட்ட ஆட்சியர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் ஆகியோர் வழங்கினர். உடன் முனைவர் ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ, மாவட்டக் கழக துணைச் செயலாளர் கோவி. அய்யாராசு, பாபநாசம் ஒன்றிய பெருந்தலைவர் சுமதி கண்ணதாசன் மற்றும் அரசு அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளனர்.



தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (23.05.2023) மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி தலைமையில் மாவட்ட அளவிலான அனைத்து துணை ஆணையர்கள் (கலால்) மற்றும் உதவி ஆணையர்களுடனான (கலால்) ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்த ஆய்வுக்கூட்டத்தில் உள்துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆணையர் முனைவர் எம்.மதிவாணன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.